இசை வல்லுநர்களுக்குப் பரிசு.

***77 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் உள்ள சிறந்த இசை வல்லுநர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக அரசினால் நிறுவப்பட்டு, அதன் நிதி உதவியுடன் இயங்கி வரும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், இசைக்கலை வல்லுநர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றை அமல் செய்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சங்கீத நாடக சங்கம் சினிமாத்துறை, இசைத்துறை வல்லுநர்களுக்குப் பரிசு அளித்து வருவதாகச் சொன்னார்கள். கர்நாடக இசை வல்லுநர்களுக்கும் பரிசு வழங்கும் திட்டம் உண்டா? இசைக்கலை வல்லுநர்களாகிய கிட்டப்பா, தியாகராஜ பாகவதர், ராஜரத்தினம் போன்றவர்களுடைய குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் சங்கீத நாடக சங்கத்தின் மூலமாக, சிறந்த இசை வல்லுநர்கள், பாடல் ஆசிரியர்கள், ஆண்டுக்காண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. யார் யாருக்குப் பரிசுகள் வழங்கலாம் என்பதற்கு சங்கீத நாடக சங்கம் அந்த அந்தத் துறையில் வல்லுநர்களாக இருக்கிறவர்களைத் தனித்தனி குழுக்களாகப் போடுகிறார்கள். இந்தக் குழுக்களின் சிபார்சை அவர்கள் முடிவில் பரிசிலனை செய்து ஆண்டுதோறும் பரிசுகளும், கலைமாமணி என்ற பட்டமும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 40 பேர்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள். இசைத்துறையில் வல்லுநர்களாக இருந்து 58 வயதுக்கு மேற்ப்பட்டவர்களாக வசதியற்று இருப்பவர்களுக்குப் பென்ஷன் வழங்க மத்திய அரசாங்கத்தின் உதவியுடனும், மாநில அரசாங்கத்தின் உதவியுடனும் சங்கம் உதவி வருகிறது. 50 ரூபாய், 75 ரூபாய் என்ற அளவில் பென்ஷன் உதவி அளிக்கிறது. இந்திய அரசு இதுவரை கொடுத்துவந்த உதவியைக் கூட இனி புதியதாக யாருக்கும் தாங்கள் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்கள். ஆகவே மாநில அரசு தற்போது ரூபாய் 2 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல கிட்டப்பா, ராஜரத்தினம் ஆகியவர்களின் குடும்பத்தினர் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுடைய மனுவும் ஆராயப்பட்டு, எந்த வகையில் உதவி செய்யலாம் என்பது பரிசிலிக்கப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : இந்தப் பரிசு வாய்ப்பாட்டுக்காரர்களுக்கு மட்டும் அளிக்கப்படுகிறதா? இசைக் கருவி வல்லுநர்களுக்கும் அளிக்கப்படுகிறதா?

1971 ஜூன் 29]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இசைத்துறையில் தலைசிறந்து நிற்கிற வீணை, பிடில், மிருதங்கம், கஞ்சிரா, புல்லாங் குழல்—வித்வான்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்கள் அந்த அந்தத் துறையில் வல்லுநர்களாக, புகழ் மிக்கவர்களாக, பல மாணவர்களை உருவாக்கிய பெருமை உடையவர்களாக, பெயரும், புகழும் பெற்ற வயது முதிர்ந்தவர்களாக இருக்க வேண்டும். முதல் ஆண்டு பரிசு பெற்றவருக்கு அடுத்த ஆண்டு கொடுப்பதில்லை.

திரு. சோ. கருணாநாதன் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் கீழ் சிறந்த இசை அமைப்பாளருக்கும், நடன ஆசிரியர்களுக்கும் பரிசு வழங்க, அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறந்த இசை வல்லுநர்களும், நடன ஆசிரியர்களும் பரிசு பெற்று வருகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : இசை வல்லுநர்கள் என்ற வரிசையில் சினிமாத் துறையில் இருக்கிற டைரக்டர்களும் வருகிறார்களா? அப்படி என்றால் எம். எஸ். விஸ்வநாதன் போன்றவர்கள் இந்தப் பரிசுக்குத் தகுதி உடையவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இன்னின்னார் பரிசுத் பெறத் தகுதி உடையவர்கள் என்று குறிப்பிட்டேன். அந்தக் குழுவினர் யார் யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்கிற பெயர்ப் பட்டியல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அறிந்துசொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தமாதிரி பரிசு வழங்குகிற சமயத்தில் இதற்கு யார், யார் தேர்வுக் குழுவில் நியமனம் செய்யப் படுகிறார்கள்? எந்த அடிப்படையில் இந்தப் பரிசு கொடுக்கப் படுகிறது என்று விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைத்தான் முன்பே சொன்னேன். சங்கீத நாடக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் துணைக் குழுக்களை நியமிக்கிறார்கள். அந்த அந்த இசைத் துறையைச் சேர்ந்தவர்கள் அந்தக் குழுக்களில் இடம் பெறுகிறார்கள். அவர்கள் அந்த அந்தத்துறையில் யார் யாருக்கு பரிசு அளிக்கலாம் என்பதை ஆராய்ந்து பரிந்துரைக்கிறார்கள். பொதுக்குழு உட்கார்ந்து மறுபடியும் தேர்ந்தெடுத்து பரிசு அளிக்கிறார்கள். கலைஞர்களே இந்தப் பரிசுக்குரிய கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதால் இதில் இதுவரை எந்தக் குறைபாடும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

திரு. கா. மு. கதிரவன் : வில்லுப்பாட்டு வாசிக்கின்றவர்கள் இந்தப் பரிசுத் திட்டத்தின் கீழ் வருகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வில்லுப்பாட்டு வாசிக்கின்றவர்கள் விலக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பரிசு பெற்றிருக்கிறார்களா என்கிற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, தாரை தப்பட்டை போன்ற வாத்தியக்காரர்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கவின்கலைகள்—ஃபைன் ஆர்ட்ஸ் என்ற பிரிவின் கீழ் அவை வருவதில்லை. கவின் கலைகள் என்ற தலைப்பின் கீழ் வருபவைகள் தான் இதில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : வில்லுப்பாட்டில் சிறந்த பிச்சைக் குட்டி என்பவர் காலமாகிவிட்டார். அவரது குடும்பத்திற்கு உதவித்தொகை அளிக்க அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவரது குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் சங்கீத நாடக சங்கத்திற்கு விண்ணப் பித்துக்கொண்டால் அதுபற்றி பரிசீலிப்பார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : தமிழ்நாட்டின் சிறந்த கலையாகிய தெருக் கூத்து, பொம்மலாட்டம் போன்றவைகள் அருகி வருகின்றன. அவற்றின் வளர்ச்சிக்கும் ஊக்கம் அளிக்க இந்தப் பரிசுத் திட்டத் தின் கீழ் அவர்கள் கொண்டுவரப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கலை வல்லு நர்களுக்கும் பரிசு வழங்குவதில் தடை இருக்காது என்று நினைக் கிறேன். சங்கீத நாடக சங்கத்தினர் அவர்களைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இசைக் கலைஞர் களுக்குப் பரிசுகள் வழங்குகிறபோது, அதற்காக தமிழக அரசால் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ? மத்திய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கித் தருகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுகளின் முழுப் பொறுப்பையும் தமிழக அரசுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பரிசு பெறுபவர்களுக்கு இரண்டு சவரன் பதக்கமும், 'கலாசிகாமணி' என்ற பட்டமும், ஒரு பட்டாடை போர்த்தலும் நடைபெறுகிறது.

திண்டுக்கல் அரசினர் பெண்கள் கலைக்கல்லூரி.

*** 78 வினா—திரு. ஓ. என். சுந்தரம்** : மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திண்டுக்கல் நகர் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியை தற்போதுள்ள சந்தடி மிக்க இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் உண்டோ?